RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2410

# இந்திய ஐரோப்பிய தத்துவங்களில் சமயக் கோட்பாட்டு தாக்கங்களும் வளர்ச்சி நிலைகளும் (ஆசீவகம் முதல் சைவசித்தாந்தம் வரை)

**மி.சு. எழிலரசி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# Religious Doctrinal Influences and Stages of Development in Indo-European Philosophies (from Asivakam to Saiva Siddhanta)

**M.S. Ezhilarasi** [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: anni.ezhil3@gmail.com

Received: 19-08-2022
Revised: 30-10-2022
Accepted: 08-11-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

Created by the sages and siddhas who emerged on Tamil soil, the Asivaka ethic (a place in which an Indian philosophical doctrine is taught through an ascetic life) was a place to impart the multi-disciplinary knowledge required by the people and to provide all kinds of solutions. After the first century A.D., when the divine religion spread and developed in this land, the ideas and symbols of this doctrine were widely distributed among the different religions. After the Vedic system based on the Vedas penetrated this land, many changes were introduced to the doctrines of the ancient Tamils and within the atheistic and theistic religions. There was a great deal of exchange of ideas between European philosophical ideas and Tamil doctrines and religious principles. Science and God-based ideas complemented each other and developed, especially in the thought of the origin of the world. Many utopian arguments and mythologies were introduced into religious thought as well as universal theories due to the influence of orthodoxy. In the end, the incomparable spirituality of the Tamils, which supported the ideas of the philosopher Einstein and combined spirituality with science, developed into Saiva Siddhanta. It served as the focal point between materialism and idealism.

**Keywords:** Saiva Siddhantam, European Philosophical Ideas, Asivakam, Idealism

## முன்னுரை

**"Science without Religion is Lame; Religion without Science is Blind"-** இது தத்துவ ஞானியும், அறிவியல் அறிஞருமான ஐன்ஸ்டீன் என்பாரின் கூற்று. அதாவது,'ஆன்மீகம் சேராத அறிவியல் நொண்டி அறிவியலில்லாத ஆன்மீகம் குருடு' - என்ற அவரது கூற்றிலிருந்து சமயத்தை அறியாத அறிவியலும், அறிவியலை அறியாத சமயமும் குறைபாடுடையன என்பது புலனாகின்றது. இவ்வாறு சமயமும், அறிவியலும் இணைந்த நிலையே தத்துவமாக வளர்ச்சியுற்றது. முதலில் கடவுளை அறியாத மற்றும் ஏற்றுக் கொள்ளாத சமயங்களின் மெய்யியல் சிந்தனைக் கோட்பாடுகள், பிற்காலத்தில் கடவுளை அறிந்த, கடவுள் நம்பிக்கையுடைய சமயங்களின் தத்துவச் சிந்தனைகளோடு கலக்கப்பட்டு, மேலும் வளர்ச்சியுற்ற நிலைகளும் காணப்படுகின்றன. தமிழ் மண்ணில் முதலில் காணப்பட்ட ஆசீவக நெறி, அதனையடுத்துத் தோன்றிய சமண, பௌத்த நாத்திக சமயங்கள் ஆகியவை தோன்றின. கடவுள் பற்றிய சிந்தனை மனித உள்ளங்களில் எழுச்சி பெற்ற பிறகு இந்த சமண, பௌத்த சமயங்களிலிருந்து ஒரு பிரிவு தோன்றி கடவுளை ஏற்றுக் கொண்டன. இதனையடுத்து பிற்காலத்தில் தோன்றிய சைவ, வைணவ சமயங்களிலும், கிறித்தவ மற்றும் இஸ்லாமிய சமயங்களிலும் தத்துவங்களும் இணைந்து

இந்திய மற்றும் ஐரோப்பிய தத்துவங்களாக வளர்ச்சி பெற்ற நிலைகள் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகிறது.

## தமிழரின் ஒப்பற்ற நெறி ஆசீவகம்

தமிழக ஞானிகளால் உருவாக்கப்பட்ட ஆசீவக நெறியானது பிற்காலத்தில் அழிக்கப்பட்ட நெறியாக மாறினாலும், ஆசீவகத்தின் எச்சங்கள் இன்றைய சமயங்களுக்குள் ஊடுருவிக் காணப்படுகின்றன. ஆசீவகம் பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொண்டவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஏ.எல். பாசம் என்பவராவார். ஆசீவகத்தை ஆய்வு செய்தவர்கள் பலரும் அதனை எதிர்த்த பாலி முதலான மொழிகளில் தேடினர். இது சித்தாந்தத்தில் பரபக்கம் எனவும், தருக்கவியலில் அயலார் கூற்று எனவும் அழைக்கப்படும். தமிழ் இலக்கியங்களான மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியார் ஆகிய நூல்களில் ஆசீவகம் பற்றிய செய்திகளைத் தேடித் தொகுத்து ஆய்வு செய்தவர் ஏ.எல் பாசம் ஒருவரே. அவரைத் தொடர்ந்து பேரா. முனைவர் டி.வி. மகாலிங்கம், இரா. விஜயலெட்சுமி, முனைவர் க. நெடுஞ்செழியன், ஆதிசங்கரன் ஆகிய தற்கால அறிஞர்களும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர் ஆசீவகம் என்பதை ஆசு + ஈவு+ அகம் எனப் பகுத்துப் பொருள் காணும் போது,

ஆசு - பிழையற்ற, செம்மையான, தோல்வி ஏற்படுத்தாத, கேட்ட போதே தங்கு தடையின்றி மடை திறந்த வெள்ளமென. ஈவு - தீர்வு. அகம் - தருமிடம். எனவே, ஆசீவகம் என்பது துறவிகள் வாழுமிடத்தைக் குறித்த பெயராக விளங்கியது (Saravanan, 1997). குற்றமற்ற ஈவுகளை வழங்கக் கூடிய இடம் எனவும் புரிந்து கொள்ள முடியும். மக்களுக்குத் தேவையான அத்தீர்வுகளைக் கொடுத்தவர்கள் ஆசீவகச் சித்தர்கள் என அழைக்கப்பட்டனர். ஈவு என்பதற்கான பொருளைக் காணுகின்ற போது கணித அடிப்படையில் கூற வேண்டுமென்றால் இரண்டு எண்களை வைத்து வகுத்துப் பார்க்கின்ற பொழுது அதன் விடையாக மற்றொரு எண் கிடைக்கிறது. கணக்கியலில் மட்டுமன்று இயங்கியலில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நமக்குத் தெளிய வேண்டியவற்றைப் பகுத்தும், வகுத்தும் நாம் காணும் விடை ஈவு ஆகும். பண்டைக் கால மக்கள் சாதி, சமயங்களாகப் பாகுபடுத்தப்படுவதற்கு முன் அவர்களது உடலியல், மருத்துவம், உணவு, தொழில், வானியல் போன்றவற்றில் பல்வேறு ஈவுகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. ஆசீவகத் துறவிகளின் கற்படுக்கைகள் அமைந்துள்ள குகைகளுக்குச் சென்று மக்கள் தங்களுக்குத் தேவையான ஈவு(விடை)களைப் பெற்று வந்தனர்.

## ஆசீவகக் கோட்பாடுகளும், ஐரோப்பிய அறிவியல் தத்துவங்களும்

ஆசீவகச் சித்தர்கள் வானியல் சார்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டதால் அவர்கள் விஞ்ஞானிகள் என அழைக்கப்பட்டனர். விண் + ஞானி = விஞ்ஞானி. ஆகாயம் சார்ந்த ஆராய்ச்சியுடையவர். ஆசீவகம் ஒருமையியம், அண்டவியல் கோட்பாடு, தற்செயல் கோட்பாடு, அணுக் கோட்பாடு, ஊழ்க் கோட்பாடு, சிதைவுக் கோட்பாடு மற்றும் அபிசாதிக் கோட்பாடு போன்ற பல்வேறு கொள்கைகளை உள்ளடக்கியது.

### ஒருமையியம் (singularity/ oneness)

'ஒன்றாய், வேறாய், உடனாய்' என்ற ஒருமையிய கோட்பாட்டை ஆசீவகம் கடைபிடித்தது.

### தற்செயல் கோட்பாடு (CoIncidence Theory)

நன்மை- தீமை, மோட்சம் - நரகம் இவற்றை ஆசீவகர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எல்லாம் தற்செயலாகத் தாமே நிகழ்பவை, தாமே ஏற்றுக் கொள்பவை என்பதால் தற்செயல் என்ற கருத்துடையவர்கள்.

### அண்டவியல் கோட்பாடு (Big Bang Theory)

தமிழரின் அண்டவியல் கோட்பாடு கருந்துளையில் தொடங்குகிறது. இது பற்குடுக்கையாரின் இன்மையோடு தொடர்புடையது.

“தொன் முறை இயற்கையின் மதிய மரபிற்று ஆக
பசும் பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையின் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும்
செம் தீ சுடரிய ஊழியும் பனியொடு
தண் பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர் தருபு”

மேற்கண்ட பாடல் கருந்துளைக் (Black Hole) கொள்கையையும், பெரு வெடிப்பு(**Big Bang**) கொள்கையையும் இணைத்து அண்டத்தின் தோற்றத்தை அன்றே விளக்கியுள்ளது. ரோஜர் பென்ரோஸ் என்ற மேலை நாட்டு அறிஞர் மிகப் பிற்பட்ட காலத்திலேயே இந்த பெருவெடிப்பு ஒன்று அண்டத்தில் காலத் தொடக்கமாக நிகழ்ந்திருக்க வேண்டும் என விளக்கினார்.

## அணுவியல் கொள்கை (Atomic Theory)

அணுவியல் கொள்கை என்பது பொருள்களின் இயல்பை விளக்கும் ஓர் அறிவியல் கொள்கை ஆகும். கி.மு 5-ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்க அறிஞர் லியூசிபஸ் ஒவ்வொரு பொருளிலும் பிரிக்க முடியாத, அழிக்க முடியாத ஒன்:று அணு என விளக்கினார். கி.பி 1800 களில் ஜான் டால்டன் அணுக் கொள்கையை வெளியிட்டார்.

ஆசீவகத்தில் இந்த ஐம்பூதக் கோட்பாட்டினை அண்டத்தின் தோற்றம், அணுக்களின் இயல்பு ஆகிய முற்றாக வளர்ந்த அறிவியல் கோட்பாடுகளை எண்ணியம் என்பர். இதனை உருவாக்கியவர் தொல் கபிலர் ஆவார். அணுக்கோட்பாட்டின் விரிவே சிறப்பியம் என்னும் வைசேடிகம் ஆகும். இதனை உருவாக்கியவர் கணியாதான் என்பவராவார்.

## ஊழ்க் கோட்பாடு (Destiny Theory)

விழு என்பதிலிருந்து வீழ் என்னும் சொல்லைக் குறிப்பது போன்று உழு என்பதிலிருந்து ஊழ் என்ற சொல் தோன்றியிருக்க வேண்டும். நிலத்தில் பஞ்ச பூதங்களைச் சேர்க்கும் அற்புதமான நிகழ்வே உழுதல் ஆகும். நிலத்தைப் புரட்டி விடும் போது அதில் காற்றும், நீரும் சேர்கிறது. பின் சூரிய ஒளியின் வெப்பமும் ஆகாயச் சத்தும் வந்து அதில் நிறைகின்றது. இவ்வாறு உழுதலின் மூலம் உயிர்வளி நிலத்தில் சேமிக்கப்படுகிறது. இந்த ஊழ் என்ற சொல்லின் அடிப்படையில் அமைந்த ஊழ்கம் எனும் பயிற்சி மாந்தர் உடலின் நுண்ணிய கண்ணறைகள் தோறும் உயிர்வளி சேமிக்கப் பயன்படுகிறது. இந்த உயிர்வளியினை அதிகம் பெறும் இயற்கைச் சூழல் நிறைந்த சோலைகளிலும், மலைக் குகைகளிலும் பெரும்பாலும் ஆசீவகப் பள்ளிகள் அமைந்திருந்தன (Saravanan, 1997).

## சிதைவுக் கோட்பாடு (Theory of Atomic Disintegration)

பக்குடுக்கை நன்கணியார் அணுவியலில் நிலம், நீர், தீ, வளி என நால்வகை அணுக்கள் கூடுவதை ஆகூழ் என்றும் அவ்வாறு கூடியவை பிரிவதை போகூழ் என்றும் வரையறுத்துள்ளார். இதனை,

“பெறுதலும் இழத்தலும் இடையுறு உறுதலும்
உறுமிடத்து எய்தலும், துக்கசுகம் உறுதலும்

பெரிதவை நீங்கலும், பிறத்தலும் சாதலும்

கருவிற்பட்ட பொழுதே கலக்கும்

இன்பமும் துன்பமும் இலையும் அணு வெனத்தகும்

முன்னுள ஊழே பின்உறு விப்பது"

என்ற மணிமேகலைப் பாடல் தெளிவாக விளக்குகிறது. (சீத்தலை

பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்"

## அபிசாதிக் கோட்பாடு (Abisadik Theory)


உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப நிறத்தின் அடிப்படையில் அவற்றின் பிறப்பை வகைப்படுத்தும் ஆசீவகக் கொள்கைக்கு அபிசாதிக் கோட்பாடு என்று பெயர். ஆசீவகம் போதித்தவர்களுள் ஒருவரான பூரண காசியபர் என்பாரது கோட்பாடு இது. மணிமேகலையில் இது,

"கரும்ம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்

பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்"

எனக் குறிக்கப்பட்டுள்ளது.(சீத்தலைச் சாத்தனார்)

**ஆசீவகம் முதல் சைவசித்தாந்தம் வரையிலான தத்துவ வளர்ச்சி நிலைகள்**




## வைதீக நெறி

வேதங்கள், அறுவகை தரிசனங்கள்: (காட்சிகள்) உத்தர மீமாம்சம், 2. பூர்வ மீமாம்சம், 3. சாங்கியம், 4. யோகம், 5. நியாயம், 6. வைசேடிகம் ஆகிய இவை வடமொழி வேதத்திற்கு வியாக்யானங்களாகத் தோன்றியவை. இந்த அறுவகை தரிசனங்களுமே கடவுளைப் பற்றிப் பேசவில்லை. அவற்றிலும் நாத்திகக் கருத்துக்களே அதிகம் உள்ளன. வேதங்களில் கடவுளைப் பற்றிய புகழ்ச்சியில்லை. மாறாக சிவபெருமானை இகழ்வதாகச் சில இடங்கள் உள்ளன. வேதங்களில் அவர்கள் தேவர்களுக்கு வேள்விகள் செய்வது தான் சொல்லப்படுகிறது. தேவர்கள் கடவுள் அல்ல.(Celestial Body) மாற்று உருவங்களை உடையவர்கள். அதில் கடவுள் வழிபாடு என்ற பேச்சுக்கே துளியும் இடமில்லை. அந்த மீமாம்சை வேதங்களையே கேள்வி எழுப்புகிறது. ஆனால் கடவுளை நம்பவில்லை.

வேதங்களின் பெரும்பாலான பகுதி பிரார்த்தனைப் பாடல்களே. அவர்களிடம் நான் இதைக் கொடுக்கிறேன். நீ இதைக் கொடு என்று பண்ட மாற்றம் செய்வதே வேள்வி. தங்களுக்குத் தேவையானவற்றை அவர்களின் தெய்வங்களிடம் கோரியும், தங்களுக்குப் பிரியமானவற்றை அத்தெய்வங்களுக்கு வேள்வியில் படைத்தும் ஒரு கொடுக்கல் வாங்கல் முறையில் நிகழ்த்தப்படுபவை. எங்களுக்கு உடல் பலத்தை அருள வேண்டும், எங்கள் கால்நடைகளுக்கு வலிமை அருள வேண்டும் என்று வேண்டுதல் செய்வதாகவே இதில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் காணப்படும். ரிக், யதூர், சாம,

அதர்வணம் எனப்படும் "நான்கு வேதங்களில் ரிக் வேதத்தில் 10,600 பதங்கள் கொண்ட 1017 சூக்தங்கள் உள்ளன. இந்த வேதங்களின் காலகட்டத்தை டாக்டர். இராதா கிருஷ்ணன் கி.மு 15 -ம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகிறார். பெரும்பாலும் கி.மு 1500 முதல் கி.மு 1000 க்கு இடைப்பட்ட கால கட்டமே வேதங்களின் காலமாக வரையறை செய்யப்படுகிறது. யசூர் வேதம் என்பது வெறும் வேள்விச் சடங்குகளாகத் தொகுக்கப்பட்ட பாடல்கள் அடங்கியது. இதில் 40 அத்தியாயங்களில் 1886 மந்திரங்கள் உள்ளன. ஏறக்குறைய ரிக் வேதத்தில் உள்ள பாடல்கள் தான் மற்ற வேதங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளன. சாம வேதத்தில் 32 அத்தியாயங்களில் 460 சூக்தங்கள் உள்ளன. அதர்வண வேதம் முற்றிலும் தனித்து நிற்பது. இதில் 20 காண்டங்களாக 131 மந்திரங்கள் உள்ளன. இது குறியீட்டுச் செயல்களுக்கான வேதம். வைதிக மரபில் இந்த அதர்வண வேதம் பெரிதும் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை." (Jeyamohan, 2002).

## வினைப்பயனை அடிப்படையாகக் கொண்ட சமண பௌத்த சமயங்கள்

வைதீக சமயத்தை எதிர்த்து கடவுள் மறுப்புக் கோட்பாட்டை உடைய சமயங்களாக சமண, பௌத்த சமயங்கள் தோன்றின. இச்சமயங்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுவதற்குக் காரணமாய் இருந்தது அவற்றின் பிறவிச் சுழற்சிக் கொள்கையாகும். அக்கொள்கையின்படி எல்லா உயிர்களும் சமமானவை எனவும், உயிர்களின் நல்வினை, தீவினைக்கேற்ப அவைகளுக்கு மறுபிறவிகள் ஏற்படுகின்றன எனவும் இச்சமயங்கள் கருதுகின்றன. மேலும் மனிதன் அடுத்த பிறவியில் விலங்காகப் பிறப்பதோ, விலங்கு மனிதனராகப் பிறப்பதோ அந்தந்த உயிர்களின் நன்மை, தீமைக்கேற்ப ஏற்படுகின்றன. வினைகளிலிருந்து விடுபட்ட உயிர்களே பிறவி நீக்கம் பெற்று, பிறவியிலிருந்து விடுதலை பெற முடியும். அமைதி நிலையை, இறைநிலையை அடைய முடியும் எனவும் அவை கருதுகின்றன. "இக்கோட்பாட்டின்படி, அவரவர் விடுதலைக்கு அவரவர் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, ஒருவருடைய வினையில் பிறிதொருவர் தலையிட இயலாது. கடவுள் என்னும் சக்திக்கும் இக்கோட்பாட்டில் இடமில்லை." (Deivanayagam, 1997).

## கடவுட் கோட்பாட்டு சைவ, வைணவ சமயங்கள்

"காரைக்காலம்மையார் என்பவர் தான் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பாடல்களிலும் ஈசன், இறைவன், பெம்மான், எனப் பலவாறு சுட்டப்பட்டாலும், 'சிவன்' என்ற சொல்லாட்சி இடம்பெறவில்லை... காரைக்காலம்மையாரின் பாடலின் இறுதிப் பாடல் ஒன்றிலே,

'காரைக்காற் பேய் செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்

சிவகதி சேர்ந்து இன்ப மெய்துவர்'

என்றவிடத்து சிவகதி என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். இந்த வகையிலே காரைக்காலம்மையார் பாடல்கள்தான் சிவனைப் பெரும் தெய்வமாக வர்ணிப்பனவாக அமைந்தன." (Kalaivani, 1992).

அதனை அடுத்து திருமந்திரத்தில் சைவம், சிவம், சித்தாந்தம் போன்ற சொல்லாட்சிகள் அதிகம் காணப்படுகின்றன. தமிழ் சைவ வரலாற்றில் சைவம் என்பது சிவம் சம்பந்தமானது என்ற கருத்தினை திருமந்திரம் தான் முதலில் எடுத்துக்காட்டி விளக்குகிறது.

"சொற்பத மேவித் துரிசற்று மேலான

தற்பதம் கண்டுளோர் சைவசித்தாந்தரே"

என்ற வரிகள் திருமந்திரமே முதன்முதல் சைவசித்தாந்தத்தை அறிமுகப்படுத்தும் நூலாகக் காணப்படுவதை எடுத்துக்காட்டுகிறது. அதன் பிறகு பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்டன. ஒரே அடிமரத்தின் மற்றொரு கிளையாக சைவத்தோடு வைணவமும் தோன்றி வளர்ச்சி பெற்றது.

## கடவுள் கோட்பாட்டு சமயங்களுக்குள் உலகாயத, வைதீக நெறிகளின் தாக்கம்

சைவசித்தாந்தம் உலகப் படைப்பை கடவுள் கோட்பாட்டு அடிப்படையில் மிகச் சிறப்பாக விளக்குகிறது. ஆனால் இதற்கு உரைகண்டுள்ள உரையாளர்கள் பெரும்பான்மையினர் படைப்புக் கோட்பாட்டை விளக்கும்போது, கடவுள் கோட்பாட்டு அடிப்படையில் விளக்காமல் கடவுள் மறுப்புக் கோட்பாடுடைய சமயங்களின் பிறவிச் சுழற்சிக் கொள்கை அடிப்படையிலேயே விளக்கியுள்ளனர். சைவசித்தாந்தத்திற்கு அடிப்படையான சிவஞானபோதத்தின் முதல் சூத்திரம் முதன்முதல் உலகம் படைக்கப்பட்ட விதத்தைத் தெளிவாக விளக்குகிறது. இந்த மூலத்தோடு இணைக்கப்பட்டுள்ள அதிகரண உரையே இதற்கு பிறவிச் சுழற்சிக் கொள்கை அடிப்படையில் விளக்கம் தருகிறது. படைப்பைப் பற்றி விளக்கும் போது உற்பத்தி, திதி, நாசம் என மூன்று நிலைகளையும் இணைத்துப் பேசுகிறது. சங்காரகாரணன் என அழித்தல் தொழிலைச் செய்யும் கடவுளைப் பற்றிக் கூறி, அழித்தல் கடவுளே முதற்கடவுள். அவன் அழிக்கப்பட்ட உலகை மீளத் தோற்றுவிக்கிறான் என மறுபடைப்பைப் பற்றி விளக்குகிறது. இவ்வுலகம் உயிர்களின் வினையின் காரணமாக மீளத் தோன்றுவதாக உலகாயத மற்றும் கடவுள் மறுப்புக் கோட்பாட்டாளர்களைப் பின்பற்றியே விளக்கமளிக்கிறது.

வினைப் பயனை அனுபவித்துக் கழிப்பதற்காகவே உயிர்களுக்கு உடல் கொடுக்கப்படுகிறது என்ற சமண பௌத்த கொள்கைகளின் அடிப்படையில் பல உரையாசிரியர்களும், அவ்வுரைகளைப் பின்பற்றி பல நூலாசிரியர்களும் எழுதி வருகின்றனர். "தத்தம் வினைக்கீடாக உயிர்கள் அச்சுமாறி மற்றொரு யோனியிற் பிறக்கின்றன. தூல உடம்புகள் சூக்கும உடம்பிலிருந்து தோன்றுகின்றன. தூல உடம்பிற்கு முதற் காரணம் சூக்கும உடம்பு. இதற்கு முதற்காரணம் மூலப் பிரகிருதி" என முதற் படைப்பையும், அடுத்தடுத்த பிறப்புகளையும் ஒன்றாக்கி, பிறப்பிற்குக் காரணம் முன்வினைப் பயன் என்பதாக விளக்கப்படுகிறது (Namasivayam, 1997). "சிவஞானபோத முதல் நூற்பா, அவன் அவள் அது எனும் பிரபஞ்சம் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றிக் கூறுவதாக இருந்தாலும், இந்த அதிகரண உரையானது அழித்தல் செய்வதே கடவுளின் முதல் தொழில் என்பதாக சங்காரத்தை முதன்மைப்படுத்தி சங்காரகாரணரே முதற்கடவுள் என்பதாக விளக்கம் கூறுகிறது." (Ezhilarasi, 2018).

## வேதாந்தத் தத்துவங்களும், விளக்கங்களும்

வேதம் + அந்தம். வேதத்தை நிறைவு செய்து அதன் அந்தமாகத் தோன்றியது வேதாந்தம். குரு - சீடர் உரையாடலாகத் தோன்றிய உபநிடதங்கள், கடவுளைப் பற்றி சூத்திர வடிவில் விளக்கும் வகையில் தோன்றிய பிரம்ம சூத்திரம், இறைவனுடைய கீதை எனப்பட்ட பகவத் கீதை இவை மூன்றும் வேதாந்த இலக்கியங்களாகத் தோன்றியவை. இவை 'பிரஸ்தான திரயி' (Trible Text) என சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகின்றன. இந்த மூன்றுக்கும் உரை செய்தவர்கள் தான் சங்கரர், இராமானுஜர், மாத்துவர் என்கிற ஆச்சாரியர்கள். அவர்கள் ஏற்கனவே தொகுக்கப்பட்ட வேதாந்த நூல்களுக்கு கடவுள் கொள்கை, நாத்திகர்களின் பிறவி சுழற்சிக் கொள்கை இரண்டையும் சேர்த்து ஒருவிதமான உரைகளைக் கொடுத்துள்ளனர். அவையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்பன.

### அத்வைதம்

சங்கரர் எழுதிய அத்வைதம் என்கிற வேதாந்த விளக்க உரை உலக அளவில் (Vedhandha Philosophy) என்று அதிகமாக பிரபலியமாகி விட்டது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. இந்தியாவின் ஆன்மீகத் தத்துவம் என்றாலே அத்வைதம் என்பதாகப் பார்க்கப்படுகிறது. அதாவது நான் யார்? என்ற கேள்விக்கு இந்த சங்கரர் தரும் அத்வைத விளக்கம். பரமாத்மா, ஜீவாத்மா இரண்டும் வேறு வேறு அல்ல. ஒன்றே. 'அகம்பிரமாஸ்மி' - நான் அதுவாக இருக்கிறேன். ஆதிசங்கரரின் இந்தக் கொள்கையே அத்வைதம். துவைதம் - என்றால் இரண்டு. அ + துவைதம் (No Two) என்றால் இரண்டு இல்லை. அதாவது இரண்டு பொருள்கள் இல்லை. ஒன்று மட்டுமே. எந்த ஒன்று மட்டுமே இருக்கிறது என்று கேட்டால், பரமாத்மா, ஜீவாத்மா இரண்டில் ஒன்று மட்டுமே இருக்கிறது என்பது விளக்கம். அது

எவ்வாறு என்று கேட்டால் நான் ஜீவாத்மாவாகவும் இருக்கிறேன், அதே நேரத்தில் பரமாத்மாவாகவும் இருக்கிறேன் என்பது விளக்கம். நான் என்பது அகம். அகம்பிரமஸ்மி - நான் பரம் பொருள். நான் பிரமமாகவும் இருக்கிறேன். ஜீவனாகவும் இருக்கிறேன்.

## விசிஷ்டாத்வைதம்

பக்தியே முக்திக்கு வழி என்று கூறிய மெய்ஞானிகள் இந்த அத்வைதக் கொள்கையை எதித்தனர். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்று தான் என்று கூறினால் ஜீவாத்மா பரமாத்மாவை வழிபட வேண்டியதில்லை. எனவே இது தவறு என்று கூறி பக்தி நெறியை முதன்மைப்படுத்தியவர் இராமானுஜர். அத்வைதத்தை எதிர்த்து இராமானுஜர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது தான் விசிஷ்டாத்வைதம். அதாவது விஷேச அத்வைதம் (Qualified Monism).

பிரியமும் சேவையும் (பிரபத்தி) தான் மானிட விடுதலைக்கு வழி என்றார். இவர் பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்று கூறினாலும், முக்தி நிலையில் தன் குறைகளும், அடையாளங்களும் நீங்கப்பெற்ற ஜீவாத்மா இறுதியில் பரமாத்மாவுடன் இணைந்து விடுகிறது என்றார். இது விசேஷ அத்வைதம். எனவே விசிஷ்டாத்வைதம் ஆகும்.

## துவைதம்

மாத்துவர் துவைதக் கொள்கையை உருவாக்கினார். (strict dualism) மத்வாச்சாரியார் வகுத்த துவைதம் பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்றது. பரமாத்மா எவ்வித வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பாற்பட்டது. ஜீவாத்மா உடலோடு கூடியிருப்பதால் காமம், குரோதம், மோகம் போன்ற குறைகளுக்கு ஆட்படக் கூடியது. இவற்றிலிருந்து விடுதலை பெற ஜீவாத்மா பரமாத்மாவை வழிபட வேண்டும். இது இருமை வாதம் எனப்பட்டது. மாத்துவர் அத்வைதத்தை மிகக் கடுமையாக எதிர்க்கிறார். பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு. அதாவது, பேருயிர் வேறு - சிற்றுயிர் வேறு. பேருயிராகிய கடவுள் இவ்வுலகத்தைக் கட்டுப்படுத்துபவர். கடவுளுக்கும் நமக்கும் தாய் பிள்ளை உறவு கிடையாது. கடவுள் முதலாளி, நாம் வேலையாட்கள். அவருக்கு வேலை செய்வதன் மூலமே அவரது அன்பைப் பெற முடியும் என்பதாக விளக்குகிறார்.

## தூய சைவ நெறியாகிய சைவ சித்தாந்தம்




சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை விளக்குவது. இதனைத் தூய தமிழில் கடவுள், ஆன்மா, உலகம் என விளக்கலாம். சித்தம் + அந்தம் = சித்தாந்தம். சித்தம் என்ற சொல் நிலை நிறுத்தப் பெற்ற உண்மை என்றும் அந்தம் என்பது முடிவு என்றும் பொருள் தரும். இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முற்ற முடிந்த மெய்ப்பொருட் கொள்கை என்னும் கருத்தினைக் குறிக்கும். இம்முடிபிற்கு மேல் ஒரு முடிபில்லை. இதுவே ஏனைய தத்துவ வாதிகளின் முடிவுகளுக்கெல்லாம் மேம்பட்ட இறுதி முடிவு. (Conclusion of Conclusions) தத்துவச் சிந்தனையின் இறுதி முடிவிடம்.

ஏனைய தத்துவங்களின் முடிபுகளையெல்லாம் ஆராய்ந்து அவற்றின் மேலான முடிபாக மெய்ப்பொருட் கொள்கை உருவாகிய திறத்தினை, சமயங்களையும் அவற்றின் தத்துவங்களையும் அடிப்படையாக வைத்துப் பாகுபடுத்தியுள்ள முறையினால் தெளிவாக உணரலாம். ஆன்மீகப் படிநிலைகளில் அடித்தளத்தில் இருப்பன புறப்புறப் சமயம். அடுத்து உயர்வான புறச்சமயம். தொடர்ந்து அகப்புறச் சமயமும் அகச் சமயமும் அமைந்துள்ளன. இந்நான்கு வகைச் சமயத் தத்துவங்களுக்கும் மேலாக முடிந்த நிலையில் உள்ள தமிழர் தம் மெய்ப்பொருட் கொள்கைகளைச் சைவ சித்தாந்தம் என்று வழங்கினர். ஏனைய சமய, தத்துவங்களைப் படிநிலைகளாக ஏற்றுக் கொண்டு அவற்றினின்றும் மேம்பட்ட விழுமிய சிந்தனைச் சிகரமாகச் சைவ சித்தாந்தம் திகழ்கிறது.

கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வாழ்ந்த இறையனுபவம் பெற்ற சைவப் பெரியோர்களின் பாடல்களையும், வரலாறுகளையும் கொண்டவை 'பன்னிரு திருமுறைகள்' எனப் பெயர் பெறுகின்றன. இவற்றைச் சைவ சமய இலக்கியங்கள் எனலாம். இலக்கியத்திலிருந்து எழும் இலக்கணம் போன்று, கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி பதினான்காம் நூற்றாண்டு முடிய மெய்யறிவியல் நோக்கோடு, சைவ சமய தத்துவக் கொள்கைகளை உள்ளடக்கிய பதினான்கு சாத்திர நூல்கள் எழுந்தன. இந்தப் பதினான்கு நூல்களும் 'மெய்கண்ட சாத்திரம்' என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம், இப்பதினான்கு நூல்களுக்கும் அடிப்படையாக விளங்குவது கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியவரான மெய்கண்டார் எழுதிய 'சிவஞான போதமே' ஆகும்.

இதனைச் சிறப்புறக் கற்றுணர்ந்த சைவ சித்தாந்திகளின் சிறப்பினைத் திருமூலர்,

"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக

முற்பத ஞான முறைமுறை நாடியே

தொற்பத மேவித் துரிசற்று மேலான

தற்பரங் கண்டு ளோர்சைவ சித்தாந்தரே"

எனப் புகழ்ந்து பாடியுள்ளார். 'சைவ சித்தாந்தம்' என்ற சொல் வழக்கே திருமூலரின் பாடலில் தான் முதன் முதல் இடம்பெற்றுள்ளதென்பர். சைவம் என்பது அன்பு நெறி. அன்பாகிய கடவுளைச் 'சிவம்' எனக் கண்டு, அப்பேரன்பால் ஆட்கொள்ளப் பெற்று, உள்ளத்தால் தொழுது நிற்றலே சைவ சித்தாந்த நெறி. அன்பாகிய கடவுள் உள்ளமெனும் ஆலயத்துள் குடிகொள்ள அவரது திருவடியில் சரணாகதி அடைதலே ஆன்மா அடையும் முத்தி நிலை என்பதை சிவஞானபோதம், "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" (நூற்பா-12) என எடுத்துரைக்கிறது.

பொருள் முதல் வாதத்தையும், கருத்து முதல் வாதத்தையும் இணைத்து முப்பொருள் உண்மையை விளக்கும் சைவசித்தாந்தம்.

மேலும், திருமந்திரத்தில் உள்ள கீழ்க்காணும் பாடல்களைக் கொண்டு சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையை எடுத்துக்காட்டி விளக்கலாம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே

என்ற இப்பாடலின் வழி பொருள் முதல் வாதத்தையும், கருத்து முதல் வாதத்தையும் தெளிவுற விளக்கலாம். பொருள் முதல் வாதம் நாத்திகக் கொள்கையாகவும், கருத்து முதல் வாதம் ஆத்திகக் கொள்கையாகவும் அறிஞர்களால் அணுகப்பட்டு, சிந்தனை வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை உலக வரலாற்றில் நாம் காண்கிறோம். ஆனால் பொருள் முதல் வாதமும், கருத்து முதல் வாதமும் ஒரு நாணயத்தின் இருவேறு பக்கங்களே. நாணயத்தின் இரு பக்கங்களும் இணைந்திருக்கும் போது தான் அது நாணயமாக ஏற்றுக் கொள்ளப்படும். இக்கருத்தை மேற்கண்ட பாலோடு ஒப்பிட்டு நோக்குவோம். மரத்தால் செய்யப்பட்ட ஒரு யானை பொம்மையை உற்று நோக்கும் போது, அது செய்யப்பட்ட மரத்தின் தன்மையை நோக்கினால் யானையின் உருவம் மறைந்து, மரமாகிய பொருள் மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. அதில் உள்ள கருத்தாகிய யானையைப் பற்றிச் சிந்திக்கும் போது மரம் மறைந்து விடுகிறது. இங்கே பொருள் மறைந்து கருத்து மட்டும் வெளிப்படுகிறது. கண்ணால் காணக்கூடிய இப்பேரண்டம் மட்டுமே உண்டு என்பது பொருள் முதல் வாதம். இப்பேரண்டத்தை ஆட்சி செய்கின்ற பரம்பொருளாகிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது கருத்து முதல் வாதம்.

இரண்டு வாதங்களும் ஒன்றிணைந்த நிலையில் இப்பேரண்டமும் உண்டு, கடவுளும் உண்டு. கடவுளின் ஆட்சிக்குட்பட்டு, அவருக்குள் உள்ளடங்கி, இப்பேரண்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற தெளிவினைச் சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கிறது. பாடலின் பின்னிரண்டு அடிகளில், இக்கருத்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பொருள் முதல் வாதிகளுக்கு, பரத்தை மறைத்திருப்பது பார் முதல் பூதம். கருத்து முதல் வாதிகளுக்கு பரத்தில் மறைந்துள்ளது பார் முதல் பூதம். இங்கே பரம்பொருளுக்கும், பார் முதல் பூதமாகிய உலகிற்கும் இடையே இவ்விரண்டையும் அறியக்கூடியதான மற்றொரு பொருள் உண்டு என்னும் கருத்து தொக்கு நிற்கிறது. அந்த மூன்றாவது பொருளே ஆன்மா. இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையை இப்பாடல் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆன்மா பாசத்தைச் சார்ந்து நிற்பது 'தத்துவ தரிசனம்' எனப்படும். இறையருளால் தன்னை உணர்வது 'ஆன்ம தரிசனம்' எனப்படும். அப்படித் தன்னை உணரும் போது, தனக்கு அருள் புரிகின்ற இறையை உணர்ந்து, இறையைச் சார்ந்து விடுவது 'சிவ தரிசனம்' ஆகும். இதுவே ஆன்மா அடையும் முக்தி நிலை. பாசத்தினின்று நீங்கி, இறையைச் சார்கின்ற ஆன்மாத் தானே இறைவன் வாழும் ஆலயமாகி விடுகின்றது. இதையே சிவஞானபோதம், 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே' என விளக்குகிறது.

## முடிவுரை

மனித இனம் நாகரீகமாக வாழக் கற்றுக் கொள்ள ஆரம்பித்த பிறகு ஆன்மீகத்திற்கான தேடல் ஆரம்பித்துவிட்டது. சில ஞானிகள் தோன்றி மனித வாழ்வுக்கான நெறிகளை அந்தந்த கால கட்டங்களில் வகுத்து வந்தனர். நாளடைவில் தத்துவங்கள், சமய நெறிகள் மக்கள் வாழ்வை நெறிப்படுத்தத் தோன்றின. இவற்றின் நோக்கங்களையும், தேவைகளையும் உணர்ந்து மனித இன ஒருமைப்பாட்டிற்கு வழி வகுப்பது அவசியமாகும்.

## References


Deivanayagam, M. (1997) Viviliyam Thirukkural Saivasithantham – Oppaivu, Dravida Samaya Arakattalai, Chennai, India

Ezhilarasi, M.S. (2018) sivaganapotha Uraikalil Verupadukalum Karanangalum, TIERA, Chennai, India

Jeyamohan, (2008) Hindu Gnana Marabil Aaru Tharisanangal, Kizhakku Pathippagam, Salem, India

Kalaivani, R. (1992) Vedap Parambariyamum Saiva Sinthanthamum, University of Jaffna, Sri Lanka.

Namasivayam, E. (1997) Saiva Sinthantham kurum Thathuvangalum Thoothuvingalum – Oru Vinnayana Nooku, Chennai, India.

Saravanan, C.B. (1997) Ulaga Samayankal Thathuva Tharisanangal – Asivagam, University of Jaffna, Sri Lanka.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License